நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# தரம் : இடைநிலை – மேற்பிரிவு

*December 2007*

வினாக்கள் : 55

வழங்கப்படும் நேரம் : 65 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களைத் தரப்பட்ட வினாத்தாளில் குறியிடுக.**

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுங்கள்.

எனக்கு ஆறு வயதாக இருக்கும்போது ஒரு சமயம் ஓர் அற்புதமான படத்தைக் கண்டேன். அது ஆள்புகாக் காடுகளைப் பற்றிய உண்மைக் கதைகள் என்ற புத்தகத்தில் இருந்தது. ஒரு காட்டு விலங்கை மலைப்பாம்பு ஒன்று விழுங்கிக் கொண்டிருந்ததைக் காட்டிற்று அது.

புத்தகத்தில் இப்படி இருந்தது. மலைப்பாம்புகள் இரையை மெல்லாமல் அப்படியே விழுங்கிவிடும். பின்னர் அவற்றால் அசையக்கூட முடியாது. உணவு செரிப்பதற்கு ஆகும் ஆறு மாதங்களும் அவை தூங்கிக் கொண்டிருக்கும்.

அதன் பின்னர், காட்டில் நடக்கும் சாகசச் சம்பவங்களைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து, என் முதல் படத்தை வரைவதில் வெற்றி கண்டேன். என்னுடை சாதனையைப் பெரியவர்களிடம் காட்டி என் படம் அவர்களைப் பயமுறுத்துகிறதா என்று கேட்டேன். ஒரு தொப்பி எங்களை எப்படிப் பயமுறுத்தமுடியும்? என்று அவர்கள் எனக்குப் பதில் அளித்தனர்.

என்னுடைய படம் தொப்பியைக் குறிக்கவில்லை. யானையை விழுங்கிய ஒரு மலைப்பாம்பைக் குறித்தது. ஆகவே நான் மலைப்பாம்பின் உட்பகுதியைக் காட்டும் படத்தை வரைந்தேன், பெரியவர்கள் புரிந்து கொள்ளும் வகையில். அவர்களுக்கு எப்போதுமே விளக்கங்கள் தேவை. மூடின அல்லது திறந்த மலைப்பாம்புகளின் படங்களை ஒதுக்கி வைத்துவிட்டு புவியியல், வரலாறு, கணிதம் ஆகியவற்றில் கவனத்தைத் திருப்புமாறு பெரியவர்கள் புத்திமதி கூறினார்கள். இப்படித்தான் ஓவியம் வரையும் மகத்தான தொழிலொன்றை ஆறு வயதில் கைவிட்டேன். நான் வரைந்த படங்களின் தோல்வியால் மனமுடைந்து போனேன். பெரியவர்கள் ஒருபோதும் எதையும் தாங்களாகவே புரிந்து கொள்வதில்லை. எப்போதும் ஓயாமல் விளக்கங்களைத் தருவது குழந்தைகளுக்குச் சலிப்பாக இருக்கிறது.

(அந்த்வான்த் செந்த்-எக்சுபெரி என்ற பிரஞ்சு எழுத்தாளரின் குட்டி இளவரசன் என்ற கதையின் தமிழாக்கத்திலிருந்து எடுக்கப்பட்டது. தமிழாக்கம் ச மதனகல்யாணி, வெ ஸ்ரீராம்)

சரியான விடையைத் தெரிந்தெடுக்கவும்.

1. கதையில் வரும் சிறுவன் எத்தனை வயதில் படத்தைக் கண்டான்?

(a) ஏழு வயது
(b) பத்து வயது
(c) ஆறு வயது
(d) ஐந்து வயது

2. அது எப்படியான படம்?

(a) அதிசயமான படம்
(b) அற்புதமான படம்
(c) அழகிய படம்
(d) அருவருப்பான படம்

3. அந்தப் படம் எந்தப் புத்தகத்தில் இருந்தது?

(a) ஆள்புகாக் காடுகள் பற்றிய உண்மைக் கதைகள்
(b) ஆள்புகும் காடுகள் பற்றிய உண்மைக் கதைகள்
(c) ஆள்புகும் காடுகள் பற்றிய பொய்க் கதைகள்
(d) ஆள்புகாக் காடுகள் பற்றிய பொய்க் கதைகள்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

4. அந்தப் படம் எதைக் காட்டிற்று?

(a) ஒரு சிங்கத்தை மலைப்பாம்பு விழுங்குவதை
(b) ஒரு விலங்கை மலைப்பாம்பு விழுங்குவதை
(c) ஒரு புலியை மலைப்பாம்பு விழுங்குவதை
(d) ஒரு மானை மலைப்பாம்பு விழுங்குவதை

5. மலைப் பாம்புகள் இரையை

(a) மென்று விழுங்கும்
(b) கடித்து விழுங்கும்
(c) மெல்லாமல் அப்படியே விழுங்கும்
(d) கடித்து குதறி விழுங்கும்

6. மலைப்பாம்பின் உணவு செரிப்பதற்கு

(a) மூன்று மாதம் செல்லும்
(b) ஐந்து மாதம் செல்லும்
(c) ஏழு மாதம் செல்லும்
(d) ஆறு மாதம் செல்லும்

7. சிறுவன் வரைந்த படம் பெரியவர்களுக்கு எப்படி தெரிந்தது?

(a) ஒரு மலையைப் போல்
(b) ஒரு தொப்பியைப் போல்
(c) ஒரு மாங்காயைப் போல்
(d) ஒரு தேங்காயைப் போல்

8. எந்த மிருகத்தை விழுங்கிய மலைப்பாம்பைச் சிறுவன் வரைந்திருந்தான்?

(a) பூனையை
(b) நாயை
(c) யானையை
(d) குரங்கை

9. சிறுவன் எத்தனை வயதில் ஓவியம் வரையும் தொழிலைக் கைவிட்டான்?

(a) நான்கு வயதில்
(b) பத்து வயதில்
(c) பன்னிரண்டு வயதில்
(d) ஆறு வயதில்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

10. எப்போதும் ஓயாமல் விளக்கங்களைத் தருவது குழந்தைகளுக்கு

(a) கோபமாக இருக்கிறது
(b) சலிப்பாக இருக்கிறது
(c) இரக்கமாக இருக்கிறது
(d) கருணையாக இருக்கிறது

**“ஊகமுள்ள காகம்” என்ற கவிதையை வாசித்து அதிலுள்ள தகவல்களைக் கொண்டு 11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**ஊகமுள்ள காகம்**

தண்ணீர் கிடையாமல் - காகமொன்று
தவித்து அலைகையிலே
மண்ணாற் செய்த ஒரு - சாடியினை
வழியிற் கண்டதம்மா

சாடியின் மீதிருந்து - தலையைச்
சரித்து நோக்கிடவே
சாடியிலே தூரில் - சற்றே
தண்ணீர் தெரிந்ததம்மா

காகம் உடன் எழுந்து - சிறு சிறு
கற்கள் பொறுக்கிவந்து
ஊகமாய்ச் சாடியினுள் அவற்றை
ஒவ்வொன்றாய் இட்டதம்மா

இட்டிடவே நீரும் - மேலே
எழுந்து வந்ததம்மா
சட்டமாகக் குடித்துக் - காகம்
தளர்ச்சி தீர்ந்ததம்மா

ஊக்கம் உடையவர்க்குத் - துன்பம்
உலகில் இல்லை அம்மா
ஆக்கம் பெருகும் அம்மா - இதை நீ
அறிய வேண்டும் அம்மா.

(தேசிகவிநாயகம்பிள்ளை)

11. இந்த பாடலில் குறிப்பிடப்பட்ட பறவை எது?

(a) கோழி
(b) பருந்து
(c) காகம்
(d) வாத்து

12. அலைதல் என்பதன் பொருள்

(a) பல இடங்களில் திரிதல்
(b) ஒரே இடத்தில் நிற்றல்
(c) ஒரே இடத்தில் நின்று சுற்றிப் பார்த்தல்
(d) ஒரே இடத்தில் இருத்தல்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

13. காகம் எவற்றைப் பொறுக்கி வந்து சாடியினுள் இட்டது?

(a) பாறாங் கற்களை
(b) பெரிய பெரிய கற்களை
(c) சிறு சிறு கற்களை
(d) சிறு சிறு விதைகளை

14. பாடலில் குறிப்பிடப்படும் தளர்ச்சி என்பதன் பொருள் யாது?

(a) மகிழ்ச்சி
(c) களைப்பு
(b) கவலை
(d) துன்பம்

15. இந்த பாடல் சொல்லும் அறிவுரை என்ன?

(a) ஊக்கம் உடையவருக்குத் துன்பம் இல்லை
(b) ஊக்கம் இல்லாதவருக்கு இன்பம் ஏற்படும்
(c) ஊக்கம் உடையவருக்கு தொல்லை ஏற்படும்
(d) ஊக்கம் இல்லாதவருக்கு மகிழ்ச்சி ஏற்படும்

**6 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்டவற்றுள் பொருத்தமானதைத் தெரிவு செய்க.**

16. பொருட் பெயர் என்பது

(a) ஓர் இடத்தின் பெயர்
(b) ஒரு பொருளின் பெயர்
(c) ஒருவரின் இயற்பெயர்
(d) ஒரு நகரத்தின் பெயர்

17. இடப் பெயர் என்பது

(a) பொருளைக் குறிக்கும் பெயர்
(b) இடத்தினைக் குறிக்கும் பெயர்
(c) ஒருவரைக் குறிக்கும் பெயர்
(d) இவற்றில் எதுவும் இல்லை

18. சினைப் பெயர் என்பது

(a) முழுப் பொருளின் அங்கத்தைக் குறிக்கும் பெயர்
(b) முழுப் பொருளையும் குறிக்கும் பெயர்
(c) காலத்தைக் குறிக்கும் பெயர்
(d) இவற்றில் எதுவும் இல்லை

அடுத்த பக்கத்தில் தொடரும்.

19. காலப் பெயர் என்பது

(a) இடத்தைக் குறிக்கும் பெயர்
(b) காலத்தைக் குறிக்கும் பெயர்
(c) ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்
(d) இவற்றில் எதுவும் இல்லை

20. குணப் பெயர் என்பது

(a) குணத்தைக் குறிக்கும் பெயர்
(b) இடத்தைக் குறிக்கும் பெயர்
(c) காலத்தைக் குறிக்கும் பெயர்
(d) பொருளைக் குறிக்கும் பெயர்

**வினாக்கள்: 21 - 25 பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிவு செய்க**

21. அணில் பெரிய மரத்தில் ----------------- .

22. பட்டம் காற்றில் ஆடி ஆடி -------------- .

23. பத்மா அழகான வீடு ---------------------- .

24. கரு நிறக் காகம் வானில் -------------- .

25. நாங்கள் தமிழ் ------------------------------- .

| | |
|---|---|
| **(a)** கட்டினாள் | **(b)** படிக்கிறோம் |
| **(c)** பறக்கிறது | **(d)** ஏறுகிறது |

**வினாக்கள்: 26 - 30 கீழே தரப்பட்டுள்ள பறவைகளுக்குரிய பொருத்தமான ஒலிச் சொல்லைத் தெரிவு செய்க.**

26. கிளி
(a) கூவும் (b) கத்தும் (c) அகவும் (d) கொக்கரிக்கும்

27. மயில்
(a) அலறும் (b) அகவும் (c) கத்தும் (d) கூவும்

28. ஆந்தை
(a) கூவும் (b) கொக்கரிக்கும் (c) கத்தும் (d) அலறும்

29. கோழி
(a) கொக்கரிக்கும் (b) கூவும் (c) கத்தும் (d) அகவும்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

30. குயில்

(a) அகவும் (b) அலறும் (c) கத்தும் (d) கூவும்

**வினாக்கள்: 31 - 35 பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் வரும் சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

31. நாய் ------------------ ஆட்டியது.
(a) வாளை (b) வாலை (c) வாழை (d) வாய

32. ----------------------- மானைத் துரத்தியது.
(a) புளி (b) பழி (c) புலி (d) பலி

33. அப்பா கூறிய ---------------------- களைச் செய்து முடித்தேன்.
(a) வேலை (b) வேளை (c) வேழை (d) வேல

34 (மழை, மலை) பெய்தமையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.
(a) மலை (b) மழை (c) மாலை (d) மளை

35. (பழங்களை, பளங்களை) உண்பது உடம்பிற்கு நல்லது.
(a) பழங்களை (b) பலங்களை (c) பளங்களை (d) பாலங்களை

**வினாக்கள்: 36 - 40 பின்வரும் பட்டியல் ஒவ்வொன்றிலும் ஒன்று வேறுபட்டு நிற்கிறது. அதனைக் கண்டுபிடியுங்கள்.**

36. (a) மைனா (b) காகம் (c) குயில் (d) கங்காரு

37. (a) மல்லிகை (b) முல்லை (c) சந்தனம் (d) ரோஜா

38. (a) கதிரை (d) கணிணி (b) மேசை (c) கட்டில்

39. (a) வானொலி (b) ஜன்னல் (c) கதவு (d) சுவர்

40. (a) அரசன் (b) இளவரசன் (c) சேவகன் (d) அரசி

**வினாக்கள்: 41 - 45 பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்க.**

41 அண் ------- ன்

(a) ன (b) ந (c) ண (d) ணா

42. அ ------ ங்கு

(a) ற (b) ர (c) றா (d) ரா

அடுத்த பக்கத்தில் தொடரும்.

43. ப ------- க்கம்

(a) ள (b) ழ (c) ல (d) லா

44. பன் ------- ர்

(a) னீ (b) நீ (c) ணீ (d) னி

45. மன் ------ ன்

(a) ணா (b) ந (c) ண (d) ன

**வினாக்கள்: 46 - 50 தவறாக எழுதப்பட்டுள்ள வினைமுற்றுகளின் சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

46. நான் பாடலைக்கு போகிறாய்.
47. அது விளையாடிக் கொண்டிருந்தான்.
48. அவள் சமையல் செய்யத் தொடங்கியது.
48. மாமாவும் மாமியும் வாணி வீட்டுக்கு வந்தோம்.
50. கமலா இன்று முதல் தமிழ்ப்பாடசாலைக்கு வரத் தொடங்கியது.

| | |
|---|---|
| **(a)** தொடங்கினாள் | **(b)** கொண்டிருந்தது |
| **(a)** வந்தார்கள் | **(d)** போகிறேன் |

**வினாக்கள்: 51 - 55 கோடிட்ட இடங்களில் வரும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

51. பெரியோர் -----------க் கண்டு துன்பம் அடையார்.
52. சிலர் ------------- போற்றுவர்.
53. உயர்வும் ------------- மாறி மாறி வரும்.
54. கடவுள் ஆதியும் ----------- அற்றவர்.
55. கண்ணன் ஓட்டப் பந்தயத்தில் கிடைத்த ----------க் கண்டு அஞ்சவில்லை.

| | |
|---|---|
| **(a)** புதுமையை | **(b)** தாழ்வும் |
| **(c)** அந்தமும் | **(d)** தோல்வியை |

இதுவே இறுதிப் பக்கம்.